தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-3-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலைக்கழகத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக செஞ்சுருள் சங்கம் மற்றும் நாட்டு நலப்பணித்திட்டம் இணைந்து எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி மார்ச் 28 முதல் மார்ச் 30-ம் தேதி வரை நிகழ்ச்சி நடந்தது.

400 மாணவர்கள் பங்கேற்ற எய்ட்ஸ் விழிப்புணர்வு உரையை மருத்துவர் கே. மகாதேவன், பேராசிரியர் மற்றும் தலைவர் (ஓய்வு), கோயமுத்தூர் மருத்துவ கல்லூரி நிகழ்த்தினார். தமிழ்நாடு எய்ட்ஸ் பாதிப்பில் 0.3 சதவிகித கொண்டு 9ஆம் இடத்தில் உள்ளது. இதில் இளைஞர்கள் அதிமாக பாதிக்கப்படுகிறார்கள். எனவே மாணவர்கள் உடல் நலம், நல்ல பழக வழக்கம் ஆகியவற்றின் மூலம் இது போன்ற மருந்து இல்லாத நோ்களை வராமல் தவிர்க்க வேண்டும் என்றார். திரு. எம்.சோமேஷ், தலைவர், கோயமுத்தூர் எய்ட்ஸ் பாதிக்கப்பட்டோர் நல மையம் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார். இந்நோய் தாக்கக்கூடிய பாலியல் தொழிலாளர்கள், போதை ஊசி பழக்கம் உள்ளவர்கள், ஆகியவைகள் குறித்து எடுத்துரைத்தார். நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருக்கும் அரசு திட்டத்தை உணர்ந்து பாதிக்கப் பட்டவர்களுக்கு படித்த மாணவர்கள் எடுத்துரைக்க வேண்டும் என்றார். பாதிக்கப்பட்டோர் சமூகத்தில் ஒதுககப்படுதல், புறக்கணிக்கப்படுதல் ஆகியவற்றை அகற்ற வேண்டும் என்றார்.

திரு. என்.ஆர். வைத்தீஸ்வரன் செஞ்சுருள் சங்க மேலாளர் 40 மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். எய்ட்ஸ் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும் முறைகள், பாதிக்கப்பட்டோருக்கு எடுத்துரைக்க வேண்டிய மருத்துவ மற்றும் உடல் நல ஆலோசனைகள் குறித்து விளக்கினார்.

முனைவர். S மகிமைராஜா, முதன்மையர் (வேளாண்மை) அவர்களின் மேற்பார்வையில் செஞ்சுருள் சங்க அலுவலர்கள் முனைவர். N. சக்திவேல், முனைவர். A. தங்க ஹேமாவதி, முனைவர். R. பாவேந்தன், முனைவர். M.R. லதா மற்றம் முனைவர். K. ஹேமா பிரபா ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்து கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்